# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 352 | 4 Pages | 14.7.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 352 | 4 பக்கங்கள் | 14.7.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் அதிமுக, பாமக வைத்த அக்னி பரீட்சையில் அசால்ட் வெற்றி பெற்ற திமுக

சென்னை, ஜூலை 14

விக்கிரவாண்டி சட்டசபை தொகுதி இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் அன்னியூர் சிவா அமோக வெற்றி பெற்றுள்ளதை அக்கட்சியினர் தமிழ்நாடு முழுவதும் கொண்டாடினர். திமுகவின் பிரதான எதிர்க்கட்சியான அண்ணா திமுக இடைத்தேர்தலை புறக்கணித்த நிலையில், தங்களது வாக்கு வங்கியை அப்படியே தக்க வைத்து அதிமுகவின் கணிசமான வாக்குகளையும் தங்கள் பக்கம் கொண்டு வந்து திமுக பிரம்மாண்டமான வெற்றியை அறுவடை செய்திருக்கிறது.

ஜனநாயகத்தில் தேர்தல் களத்தில் 'வெற்றி' ஒன்றுதான் பிரதானமானது. அந்த வெற்றிக்கான வியூகங்கள் விவாதப் பொருளாக, பேசுபொருளாக இருந்தாலும் பேசப் போவது என்னவோ 'ரிசல்ட்'தான். இதுதான் அரசியல் கட்சிகளின் அரிச்சுவடி பாடம். ஓட்டு அரசியலுக்குப் போய்விட்டு தத்துவம் பேசுவதைவிட களத்தின் அடிப்படையில் வெற்றியை அறுவடை செய்வதுதான் அத்தனை அரசியல் கட்சிகளும் கையில் எடுக்கும் வியூகம்.

திமுக வியூகம்: விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தமிழ்நாட்டின் ஆளும் கட்சியான திமுகவும் இந்த வியூகத்தை மிகச் சரியாக 'வெற்றி' ஒன்றுதான் இறுதி இலக்கு என களம் கண்டது. திமுக வேட்பாளர் அன்னியூர் சிவாவை வேட்பாளராக அறிவித்தது முதல் அமைச்சர்கள் பட்டாளத்தையே களமிறக்கியது என ஒவ்வொரு நகர்வையும் 'மிதப்பில்' நகர்த்தாமல் 'கவனத்துடன்' காய் நகர்த்திக் கொண்டே வந்தது திமுக.

அதிமுக தேர்தல் புறக்கணிப்பு: திமுக களத்துக்குப் போன நிலையில் அண்ணா திமுக தேர்தலைப் புறக்கணித்தது.அண்ணாதிமுகவின் தேர்தல் புறக்கணிப்பு திமுகவுக்கு மகிழ்ச்சியான செய்திதான் என்றாலும் களத்தில் அண்ணா திமுகவின்



வாக்குகள் கவனமாக திமுக மடை மாற்றம் செய்வதற்கான உழைப்புதான் மிக முக்கியமானது. ஒருவகையில் திமுகவுக்கு அண்ணா திமுக வைத்த அக்னி பரீட்சையும் கூட. இதில் நிச்சயம் திமுக வென்றுள்ளது.

அதிமுக வாக்குகள்: விக்கிரவாண்டி தொகுதியில் அதிமுக வாக்கு வங்கி என்பது திமுகவுக்கு சவாலானதுதான். இன்னும் சொன்னால் 2019ல் திமுகவின் எம்.எல்.ஏ. ராதாமணி இறந்த போது இடைத்தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் திமுகதானே அனுதாப ஓட்டுகளால் வென்றிருக்க வேண்டும். ஆனால் அண்ணா திமுக வேட்பாளர் முத்தமிழ் செல்வம் வென்றார். அதுவும் அவர் பெற்ற வாக்குகள் 1,13,766. விக்கிரவாண்டி தொகுதியில்திமுக68,842 ஓட்டுகளைத்தான் பெற்றது. அதிமுகவிடம் 44,924 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றது திமுகதான்.

சாதித்து காட்டிய திமுக: விக்கிரவாண்டியில் 2011ல் சிபிஎம் வெல்ல அண்ணா திமுக வாக்கு வங்கிதான் காரணமாக இருந்தது. 2021 தேர்தலில் அதிமுகவின் வாக்குகள் 84,157; வென்ற திமுக வாக்குகள் 93,730. இதில் பாமகவின் வாக்குகளும் அடக்கம். திமுகவின் வாக்குகள் 90,000 என வைத்துக் கொண்டாலும் தற்போது 1.24 லட்சம் வாக்கு பெற்றுள்ளது. இது அதிமுகவின் வாக்கு கணிசமாக வந்து சேர்ந்ததால் கிடைத்தது என்பது வெளிப்படையான ஒன்று. பாமகவுக்கு சராசரியாக 30,000 முதல் 40,000 வாக்குகள் இத்தொகுதியில் இருக்கிறது என்பதை லோக்சபா தேர்தல் முடிவுகள் தெரிவித்தன. தற்போது 56,000 வாக்குகளை பாமக பெற்றுள்ளது என்பது அதிமுகவில் ஒரு பகுதி வாக்கு அங்கே திசை திரும்பி இருக்கிறது. ஆக அதிமுகவின் வாக்குகளை வெற்றிகர்மாக கொண்டு வந்து சேர்த்து சாதித்துக் காட்டியிருக்கிறது திமுக என்பது நிஜம்.

கள்ளச்சாராய சாவுகள்: இந்த களத்தில் நின்ற போதுதான் திமுக இன்னொரு நெருப்பாற்றில் நீந்த வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது. அதுதான் கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சாவுகள். மொத்தம் 66 உயிர்கள். திமுக ஆட்சி என்றாலே கள்ளச்சாராயம் ஆறாக ஓடும் என்றெல்லாம் கட்டவிழ்த்துவிடப்பட்ட பிரசாரங்களை மிக மிக கவனம்சிதறாமல்கையாண்டது ஆளும் திமுக. விக்கிரவாண்டி தேர்தல் களத்தில் ஒரு துளியேனும் 'கள்ளச்சாராய' பாதிப்பு இருந்துவிடக் கூடாது என்பதில் அதீத கவனத்தை செலுத்தியது திமுக.

வன்னியர் இடஒதுக்கீடு: இன்னொரு பக்கம் வட தமிழ்நாடு வன்னியர் வாக்குகள். விக்கிரவாண்டியிலும் வன்னியர் வாக்குகள்தான் அதிகம். ஆனால் வட தமிழ்நாட்டில் வன்னியர் வாக்குகள் அதிகமாக கிடைப்பதும் திமுகவுக்குதான். வன்னியர்களின் இந்த நம்பிக்கையைத் தக்க வைக்க சட்டசபையில் ஜாதிவாரி கணக்கெடுப்பு குறித்த தீர்மானம் நிறைவேற்றியது; வன்னியருக்கான 10.5% இடஒதுக்கீடு தருவதில் உள்ள நடைமுறை சிக்கலை அனைவருக்கும் புரியும்படி செய்ய சட்டசபை தீர்மானம் விவாதத்தை உருவாக்கி கொடுத்தது. திமுகவுக்கு எதிராக பாமக தேர்தல் களத்தில் கையில் எடுத்த வன்னியருக்கான 10.5% இடஒதுக்கீடு எனும் பதமான கத்தியை பக்குவமாக தம் கைக்கு மாற்றி தமது வாக்கு வங்கியில் சிறு கீறலும் விழாத வகையில் பார்த்துக் கொண்டதும் மிக முக்கியமானது.

கட்டுப்பாடுடன் திமுக: சட்டசபை தேர்தலில் அமோக வெற்றி, லோக்சபா தேர்தலிலும் 40க்கு 40 தொகுதிகளில் வெற்றி.. ஆளும் கட்சி நாம்தானே என்றெல்லாம் கட்சியினரை ஓவராக ஆடவிடாமல் வம்பிழுக்கும் எதிர்க்கட்சி தலைவர்களின் வம்படியான விமர்சனங்களுக்கும் அவதூறுகளுக்கும் இழிவு வசைகளுக்கும் எதிர்வினை என்ற பெயரில் இம்மியும் பந்தை எதிரிகள் கைக்கு தந்துவிடாமல் 'கட்டுப்பாடு' என்ற பெயரில் கட்டுப்படுத்தி வைத்துள்ளது திமுக. அதேபோல அரசல் புரசலாய் விமர்சனங்கள் எழுந்தாலும் கூட்டணி கட்சிகள் கைவிட்டுப் போகாமல் அவர்களின் வாக்குகளையும் முழுமையாக கொண்டு வந்து சேர்த்தது திமுக தலைமை.

திமுக தலைமையின் இத்தகைய வியூகங்களும் இத்தகைய கவனச் சிதறல் இல்லாத களமாடலும்தான் விக்கிரவாண்டி தொகுதி இடைத் தேர்தலில்சரித்திரம் பேசும்சாதனை வெற்றியை கொடுத்திருக்கிறது என்பதுதான் கள யதார்த்தம்!

## சாதிய, மதவெறி சக்திகளுக்கு தமிழகத்தில் இடமில்லை: விக்கிரவாண்டி மக்கள் வழங்கிய மகத்தான தீர்ப்பு முத்தரசன்

சென்னை, ஜூலை 14

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மக்கள் சாதிய, மதவெறி சக்திகளை முற்றாக நிராகரித்து, தி.மு.கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை மகத்தான வெற்றி பெறச் செய்துள்ளனர். நாடாளுமன்றத்தேர்தலில்அடைந்த தோல்வியால் நிலை குலைந்து போன அ.இ.அ.தி.மு.க. தேர்தல் களம் இறங்கவில்லை. இந்த நிலையில் பா.ம.க., அ.இ.அ.தி.மு.க. வாக்குகளை பெறலாம் என்ற ஆசையுடன் அலைந்தது. ஆனால், தமிழ்நாட்டில் சாதிய, மதவெறி சக்திகளுக்கு அரசியல் தளத்தில் இடமில்லை என்பதை விக்கிரவாண்டி மக்கள் நெற்றியடி தீர்ப்பாக வழங்கியுள்ளனர்.

கடந்த 2021 முதல் தமிழக மக்களின் உணர்வுகளை உள்வாங்கி நலத்திட்டங்களையும், இளைய தலைமுறையினரின்திறனைவளர்க்கும் ஊக்கம் தரும் திட்டங்களையும் செயல்படுத்தி வருவதுடன், வகுப்புவாத, பாசிச ஜனநாயக விரோத சக்திகளை எதிர்த்துப் போராடிவரும் கொள்கை உறுதி கொண்ட தி.மு.கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை வலுப்படுத்தும் வகையில் மக்கள் தீர்ப்பு அமைந்துள்ளது. கள்ளக்குறிச்சி கருணாபுரம் விஷ சாராய சாவுகளை பயன்படுத்தி அரசியல் ஆதாயம்தேடியமலிவானசெயலை மக்கள் புறக்கணித்துள்ளனர்.

சார்பற்ற நடுநிலை நீதி பரிபாலன முறைக்கு எதிராக பா.ஜ.க. அமலாக்க முயற்சிக்கும் மூன்று குற்றவியல் சட்டங்களையும், மாணவர் சமூகத்தின் மருத்துவக் கல்வி கனவை சிதைத்து வரும் நீட் தேர்வில் நடந்த ஊழல், முறைகேடுகளையும் எதிர்த்து, நீட் தேர்வு முறையில் தமிழ்நாட்டுக்கு விதிவிலக்கு கோரி வருவதை ஆதரித்து தமிழ்நாடு ஒன்றுபட்டு நிற்கிறது என்கிற உணர்வை வெளிப்படுத்தும் வகையில் இடைத்தேர்தல் வழியாக வெளிப்படுத்திய விக்கிரவாண்டி சட்டமன்றத்தொகுதி மக்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு நன்றி பாராட்டி, வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## பாமகவின் பொய் பிரசாரம் மக்களிடம் எடுபடவில்லை: அமைச்சர் பொன்முடி

சென்னை, ஜூலை 14

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டது. இதில் தி.மு.க. 1 லட்சத்து 24 ஆயிரத்து 053 வாக்குகளும், பா.ம.க. 56 ஆயிரத்து 296 வாக்குகளும் மற்றும் நாம் தமிழர் கட்சி 10 ஆயிரத்து 602 வாக்குகளும் பெற்றுள்ளன. இதன்படி தி.மு.க. வேட்பாளர்அன்னியூர்சிவா67,757 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.



இந்த நிலையில், தேர்தல் முடிவுகள் குறித்து அமைச்சர் பொன்முடி தெரிவித்து இருப்பதாவது;

பாமகவுக்கு மக்கள் சரியான பாடம் புகட்டியுள்ளார்கள். பாமகவின் பொய் பிரசாரம் மக்களிடம் எடுபடவில்லை. பாமகவுக்கு விக்கிரவாண்டி மக்கள் சரியான பாடம் புகட்டியுள்ளார்கள். அதிமுக தேர்தலில் போட்டியிடாவிட்டாலும் அவர்களுக்கும் சேர்ந்துதான் தோல்வி கிடைத்துள்ளது. எடப்பாடி பழனிசாமியின் பேச்சை அதிமுகவினரே கேட்பதில்லை என்பதற்கு விக்கிரவாண்டி தேர்தலே உதாரணம்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் திமுகவின் வெற்றிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின்தான் காரணம். 3 ஆண்டுகளில் திமுக அரசு நிறைவேற்றிய திட்டங்களால் வெற்றி பெற்றிருக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## மேற்கு வங்காளம்: லாரி ஆம்புலன்ஸ் நேருக்கு நேர் மோதியதில் 6 பேர் பலி


கொல்கத்தா, ஜூலை 14

மேற்கு வங்கத்தின் மேற்கு மெடினிபூர் மாவட்டத்தில், அபர்ணா என்ற நோயாளியை கிர்பாயில் உள்ள மருத்துவமனையில் இருந்து மெடினிபூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அவரது குடும்பத்தினர் ஆம்புலன்சில் அழைத்து சென்றனர்.

அப்போது எதிர்பாராத விதமாக, சிமெண்ட் ஏற்றி வந்த லாரி மீது ஆம்புலன்ஸ் நேருக்கு நேர் மோதியது. இந்த விபத்தில் அபர்ணாவின் குடும்பத்தினர் 4 பேர் உள்பட 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இருப்பினும், அபர்ணாவும் ஆம்புலன்ஸ் டிரைவரும் பலத்த காயமடைந்த நிலையில், அவர்கள் இருவருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. இந்த சம்பவம் பற்றி போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, லாரியை ஓட்டி வந்தவர் மது அருந்தியிருந்தாரா? அல்லது 2 வாகனங்களிலும் பழுது ஏதேனும் இருந்ததா? என்ற அடிப்படையில் விசாரணை நடப்பதாக போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கெஜ்ரிவாலின் வாழ்க்கையுடன் பா.ஜ.க. விளையாடுகிறது: ஆம் ஆத்மி எம்.பி. குற்றச்சாட்டு



புதுடெல்லி, ஜூலை 14

ஆம் ஆத்மி கட்சியின் ராஜ்யசபை எம்.பி. சஞ்சய் சிங் செய்தியாளர்கள் சந்திப்பில் இன்று கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் பேசும்போது, டெல்லி முதல்மந்திரி கெஜ்ரிவாலின் வாழ்க்கையுடன் பா.ஜ.க.வும்,மத்தியில்உள்ளஅதன்அரசும்விளையாடிகொண்டிருக்கிறது.

அவருடைய உடல் எடை 8.5 கிலோ வரை குறைந்துள்ளது. சிறையில் இருந்தபோது, அவருக்கு ரத்த சர்க்கரை அளவும் வெகுவாக குறைந்து போனது என குற்றச்சாட்டாக கூறியுள்ளார். எனினும், பா.ஜ.க. இதற்கு பதில் எதுவும் தரவில்லை.

அவர் தொடர்ந்து பேசும்போது, அவரை சிறையில் இருந்து விரைவாக வெளியே கொண்டு வந்து, மருத்துவ சிகிச்சை அளித்திருக்கவில்லை என்றால், அவருக்கு ஏதேனும் தீவிர விளைவுகள் ஏற்பட்டிருக்க கூடும் என்றும் கூறினார்.

அமலாக்க துறையால் பணமோசடி வழக்கில், கடந்த மார்ச் 21ந்தேதி, கெஜ்ரிவால் கைது செய்யப்படும்போது, அவருடைய உடல் எடை 70 கிலோவாக இருந்தது. அவருடைய உடல் எடை தற்போது, 61.5 கிலோவாக உள்ளது.

தொடர்ச்சியான இந்த உடல் எடை குறைவுக்கு காரணம் தெரியவில்லை. இந்த உடல் எடை குறைவானது, சில தீவிர வியாதிக்கான அறிகுறியாக இருக்கலாம்.

சிறையில் உள்ள அவருடைய உடல்நிலையை பற்றி கெஜ்ரிவாலின் குடும்பம், ஆம் ஆத்மி மற்றும் அவருடைய நலம் விரும்பிகள் வருத்தத்தில் உள்ளனர். பா.ஜ.க. மற்றும் மத்தியில் உள்ள அதன் அரசின் நோக்கம், அவரை சிறையில் வைத்து, அவருடைய வாழ்க்கையில் விளையாட வேண்டும் என்பதே ஆகும்.

இதனால், அவருக்கு சில தீவிர உடல்நல பாதிப்புகள் ஏற்படும் என அவர்கள் சதி திட்டம் தீட்டி வருகின்றனர் என்றும் குற்றச்சாட்டாக கூறியுள்ளார். சுப்ரீம் கோர்ட்டில், மதுபான கொள்கை ஊழல் வழக்கில் அவருக்கு நேற்று இடைக்கால ஜாமீன் வழங்கப்பட்டது. எனினும், சி.பி.ஐ. அவரை கைது செய்துள்ள சூழலில், அவர் இன்னும் சிறையிலேயே அடைக்கப்பட்டு உள்ளார்.

## ஊழியர்களுக்கு இனிப்புகளுடன் வெள்ளி நாணயம் பரிசளித்த அம்பானி குடும்பம்



மும்பை, ஜூலை 14

ஆனந்த் அம்பானி ராதிகா மெர்ச்சன்ட் திருமணம் மும்பையில் கோலாகலமாக நடைபெற்றது. இந்த திருமண நிகழ்ச்சி நாளை வரை மும்பையில் நடைபெற உள்ளது. இதனால், மும்பை மாநகரம் விழாக்கோலம் பூண்டுள்ளது. இதில் உள்ளூர் திரை பிரபலம் முதல் உலக பிரபலம் வரை பலரும் பங்கேற்று வருகின்றனர்.

திருமணத்திற்கு வரும் விருந்தினர்கள் 5 ஸ்டார் ஓட்டலில் தங்கும் வசதி மற்றும் ஆடம்பர பரிசுகளுடன் நடத்தப்பட்டு வரும்நிலையில், ஊழியர்களும் விழாவைக் கொண்டாடும் விதமாக ஒரு பரிசுப் பெட்டி வழங்கப்பட்டுள்ளது. இது குறித்தான புகைப்படங்களை ஊழியர்கள் தங்கள்சமூகவலைதளத்தில்பகிர்ந்துவருகின்றனர். அந்தபரிசுபெட்டியில், ஒரு வெள்ளி நாணயம் மற்றும் இனிப்புகள் உள்ளன.

ஆனந்த் அம்பானி ராதிகா மெர்ச்சன்ட் திருமணத்திற்கு முன்னதாக, முகேஷ் அம்பானி குடும்பம் 50 ஜோடிகளுக்கு திருமணம் நடத்தி வைத்தது. மேலும், அவர்களுக்கு, தங்கம், வெள்ளி ஆபரணங்கள், மளிகை பொருட்கள் மற்றும் பிற வீட்டு உபயோகப் பொருட்களுடன் ரூ.1 லட்சத்திற்கான காசோலையையும் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

# மேலூரில் பிரசித்திப் பெற்ற நாகம்மாள் கோவில் கும்பாபிஷேகம்



மேலூர் ஜூலை.14

மதுரை மாவட்டம் மேலூர் நகராட்சி அலுவலகம் அருகேயுள்ள பிரசித்திப் பெற்ற பழமை வாய்ந்த நாகம்மாள் கோவிலில் 18 ஆண்டுகளுக்கு பிறகு கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடைபெற்றது, இதில் மேலூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துக் கொண்டு சாமி தரிசனம் செய்து வழிபட்டனர்.

முன்னதாக இந்த கும்பாபிஷேகத்தையொட்டி கடந்த 10ஆம் தேதி முதல் யாகசாலை பூஜையாக, மங்கல இசை முழங்க ஸ்ரீ மகாகணபதி ஹோமம், மகாலட்சுமி ஹோமம், வாஸ்து சாந்தி உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் நடைபெற்று பூர்ணாகுதி மற்றும் தீபாராதனைகள் காட்டப்பட்டு முதற்கால யாகபூஜையானது நிறைவு பெற்றது.

தொடர்ந்து நேற்று இரண்டாம் மற்றும் மூன்றாம் கால பூஜையாக மங்கல இசையுடன், விக்னேஸ்வர பூஜை, சோமகும்ப பூஜை, வேதிகா அர்ச்சனை, மண்டலபூஜை, யந்திரன் ஸ்தாபனம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது.

தொடர்ந்து கும்பாபிஷே கத்தையொட்டி நான்காம் கால பூஜையுடன் யாகசாலை பூஜை தொடங்கிய நிலையில், புண்ணியாவாசனம், சுவாமிக்கு ரக்ஷா பந்தனம், மகாபூர்ணகுதி மற்றும் தீபாராதனையும் கடம் புறப்பாடு நடைபெற்றது.

தொடர்ந்து, கோபுர கும்ப கலசத்திற்கு சிவன் கோவில் தலைமை குருக்கள் சிவ ரீதட்சணாமூர்த்தி தலைமையில் சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இதனையடுத்து, மூலவர் சிலையான நாகம்மாள் தேவிக்கு, புனிதநீர் மற்றும் பால் ஊற்றி சிறப்பு அபிஷேகமும், அலங்கார தீபாராதனையும் நடைபெற்றது. பக்தர்கள் நாகம்மாள் தேவியை வணங்கி சாமி தரிசனம் செய்தனர்,

விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் கோவில் பரம்பரை அறங்காவலர் ரவிச்சந்திரன் தலைமையில், விழா குழுவினர் செய்திருந்தனர்.

மேலும் இந்த கும்பாபிஷேக விழாவையொட்டி, நாகம்மாள் கோவில் தெரு பக்தர்கள் சார்பாக பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

# காமயகவுண்டன்பட்டி யில் புகையிலை பொருட்கள், பிளாஸ்டிக் பைகள் ஒழிப்பு நடவடிக்கை



கம்பம், ஜூலை. 13

தேனி மாவட்டம் கம்பம் அருகே உள்ள காமயகவுண்டன்பட்டி பேரூராட்சியில் டீக்கடைகள், பேக்கரிகள் ஹோட்டல்கள், சிறு கடைகள் கறிக்கடைகள் மற்றும் பள்ளிகளை சுற்றியுள்ள பெட்டிக்கடைகள் போன்றவற்றில் புகையிலைப் பொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக், பாலிதீன் பைகள் விற்பனை செய்தது கண்டறிந்து அதை கைப்பற்றி கடைகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும் சுகாதார நிலையங்கள், பள்ளிகள், கல்வி நிலையங்கள் சுற்றியுள்ள பகுதிகளில் இவ்வகை பொருட்கள் விற்பனை செய்தால் பொது சுகாதாரத்துறை சார்பாக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த ஆய்வில் வட்டார சுகாதார மேற்பார்வையாளர்கள் பழனி குமாரசாமி சரவணன் சுகாதார ஆய்வாளர்கள் கிருஷ்ணகுமார் முரளி சரவணன் அன்பு தினேஷ் மருத்துவ அலுவலர் டாக்டர் முருகானந்தன் சித்த மருத்துவ அலுவலர் டாக்டர் சிராஜுதீன் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

# குழந்தை திருமணம் செய்து வைத்த விரக்தியில் சிறுமி தற்கொலை: கணவர் கைது



கிருஷ்ணகிரி, ஜூலை,13

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அடுத்த தட்டசந்திரம் கிராமத்தை சேர்ந்த சந்திரன், இவரது மனைவி மலர் இவர்களது மகள் திவ்யப்பிரியா (17), தருமபுரியில் உள்ள தனியார் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்த நிலையில், அதே பகுதியை சேர்ந்த அஜீத் (26) என்பவருக்கு திவ்யப்பிரியாவிற்கு பெற்றோர் திருமணம் செய்து வைக்க முடிவு செய்தனர். இதற்கு திவ்யப்பிரியா எதிர்ப்பு தெரிவித்தார். ஆனால் சிறுமியின் எதிர்ப்பை மீறி பெற்றோர் கடந்த 21.03.24 திருமணம் செய்து வைத்தனர். இதனால் மனவிரக்தியில் இருந்து வந்த திவ்யப்பிரியா கடந்த 77.24 ம் தேதி அன்று வீட்டில் இருந்த விஷமருந்தை குடித்து மயங்கிய நிலையில் இருந்தார். இதனை பார்த்த உறவினர்கள் மீட்டு கிருஷ்ணகிரி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு சிகிச்சைபலனின்றி திவ்யப்பிரியா 8ம் தேதி உயிரிழந்தார். இது குறித்து தேன்கனிக்கோட்டை காவல் உதவி கண்காணிப்பாளர்சாந்தி அவர்களுக்கு தெரியவந்தது, அவர்களின் உத்தரவின் பேரில் உடனே இராயக்கோட்டை காவல் ஆய்வாளர் பெரியதம்பி சம்பவ இடத்திற்கு கெலமங்கலம் காவல் உதவி ஆய்வாளர் தினேஷ், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சுப்பிரமணி,நேரில் சென்று விசாரித்து கெலமங்கலம் போலீஸார் வழக்கு பதிவு செய்து கணவர் அஜீத்தை கைது செய்தனர். மேலும் சிறுமியின் தந்தை சந்திரன் (45), தாய் மலர் (45) தாய்மாமன் மாரிமுத்து (34), மாமனார் ஆதப்பன் (45), மாமியார் ராஜலட்சுமி (42), ஆகிய 5 பேரிடம் விசாரணை செய்து வருகின்றனர்.

# போதை பொருள் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள்



இராமநாபுரம், ஜூலை 14

தமிழகத்தில் கள்ளச் சாராயம், கஞ்சா உள்ளிட்ட போதை பொருள் புழக்கத்தை தடுக்க தவறிய திமுக அரசின் அவலங்கள்,போதை பொருள் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை ராமநாதபுரம் மாவட்ட அதிமுக செயலாளர் முனியசாமி தலைமையில் ராமநாதபுரம் நகர் அதிமுக சார்பில் அரண்மனை பகுதி வியாபாரிகள் உள்ளிட்ட பொதுமக்களிடம் வழங்கப்பட்டது. இதில் முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மலேசியா பாண்டியன், முன்னாள் வாரியத் தலைவர் ஜி.முனியசாமி, தகவல் தொழில்நுட்ப பிரிவு விருதுநகர் மண்டல செயலாளர் சரவணகுமார், மாவட்ட பொருளாளர் குமரவேல், மாவட்ட இணை செயலாளர் கவிதா சசிகுமார், ராமநாதபுரம் நகர் செயலாளர் பால் பாண்டியன், மண்டபம் மேற்கு ஒன்றிய செயலாளர் மருது பாண்டியன், இளைஞரணி செயலாளர் ஜெயச்சந்திரன், தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்டச் செயலாளர் நாகராஜன் ராஜா கலந்து கொண்டனர்.

# இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் சேகர் பாபுவை சந்தித்து முன்னாள் மாவட்ட செயலாளர் சிவ பத்மநாதன் கோரிக்கை



தென்காசி, ஜூலை 13

தென்காசி சட்டமன்றத் தொகுதி கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம் திப்பனம்பட்டி ஊராட்சியில் இயங்கி வருகிற அரசு மேல்நிலைப் பள்ளிக்கு போதிய கட்டிட வசதிகள் இல்லை பள்ளி மாணவ மாணவியர்கள் மரத்தடியில் கல்வி கற்க வேண்டிய நிலை உள்ளது.

ஏற்கனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தென்காசி வருகை தந்த போது இதே பள்ளிக்கு அந்தப் பள்ளியில் பயிலும் குழந்தை முதல்வர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் அடிப்படையில் ரூபாய் 35 லட்சம் நிதி ஒதுக்கி கட்டடம் கட்டப்பட்டுள்ளது. பள்ளிக்கு விளையாட்டு மைதான இடம் கிடையாது.

மேலும் கூடுதல் வகுப்பறை கட்டுவதற்கும் இடமில்லை எனவே பண்பொழி திருமலை குமாரசாமி கோயிலுக்கு பாத்தியப்பட்ட இடம் பராமரிப்பின்றி இருந்து வருகிறது. அந்த இடம் சில கட்டளைதாரர்களிடம் வழங்கப்பட்டு கட்டளைதாரர்கள் முறையாக தீர்வை மற்றும் குத்தகை 25 ஆண்டுகளுக்கு மேலாக செலுத்தாத நிலையை அறிந்து சர்வே நம்பர் 40/01 ல் எண்ணில் சுமார் 4.76 ஏக்கர் நிலம் உள்ளது.

அந்த நிலத்தை பள்ளிக்கு ஒதுக்கி தர வேண்டும் என்று அமைச்சர் அவர்களிடமும் இந்து சமய அறநிலைத்துறை ஆணையர் அவர்களிடமும் பள்ளி நிர்வாகம் மூலமும் ஊர் பொதுமக்கள் சார்பிலும் மனுக்கள் வழங்கப்பட்டது. அமைச்சர் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளுக்கு வருகிற பொழுது அந்த இடத்தையும் பார்வையிட்டு சென்றார்கள் அதன் பின்னர் மாவட்ட கலெக்டரின் பரிந்துரையின் பேரில் தென்காசி உதவி ஆணையர் அவர்கள் இந்து சமய அறநிலைத்துறைக்கு பள்ளிக்கு இட ஒதுக்கீடு சம்பந்தமாக பரிந்துரை செய்து அனுப்பினார்கள். தொடர்ந்து பொதுமக்கள் சார்பில் இந்த கோரிக்கையை வைக்கப்பட்டு வருகிறது ....

அமைச்சர் அவர்கள் பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலன் கருதியும் பள்ளியின் வளர்ச்சி கருதியும் பயன்பாடற்றிருக்கிற சர்வே எண் 40/01 ல் இருக்கிற சுமார் 4.76 ஏக்கர் நிலத்தை பள்ளி மைதானம் மற்றும் பள்ளி கட்டிடம் கட்டுவதற்கு நீண்ட கால குத்தகையிலோ அல்லது துறைவாரியாகவோ நடவடிக்கை மேற்கொண்டு அற நிலைய துறைபயன்பாட்டில் இருக்கிற நிலத்தை பள்ளிக்கு ஒதுக்கி தரும்படி முன்னாள் மாவட்ட செயலாளர் சிவ பத்மநாதன் கோரிக்கை மனுவை கொடுத்தார்

நிகழ்வின்போது மாவட்ட அவைத் தலைவர் சுந்தர மகாலிங்கம் தலைமை பொதுக்குழு உறுப்பினர் முன்னாள் கடையநல்லூர் ஒன்றிய கழக செயலாளர் காசி தர்மதுரை சத்யராஜ் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஆம்பூர் கருணாநிதி கழக வழக்கறிஞர் ஹரி கிருஷ்ணன் உடன் இருந்தனர்.

# சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மக்களுடன் முதல்வர் சிறப்பு திட்ட முகாம்

தென்காசி, ஜூலை 14

தமிழ்நாடு முதலமைச்சர் தருமபுரி மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் முகாமினை துவக்கி வைத்ததைத் தொடர்ந்து தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் சிறப்பு திட்ட முகாமில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணிஸ்ரீகுமார் முன்னிலையில் மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் திட்ட முகாம் மற்றும் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பதிவேற்றம் செய்யப்படுவதை பார்வையிட்டார்.

பின்னர் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது.

பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துவரும் தமிழ்நாடு முதலமைச்சர் கள ஆய்வில் முதலமைச்சர் என்ற முன்னெடுப்பின் கீழ் மண்டல அளவில் ஆய்வுக்கூட்டங்கள் நடத்தி அரசின் சேவைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டியதை உறுதி செய்வது ஒவ்வொரு துறையின் பொறுப்பாகும் என கோரிக்கைகளை உடனுக்குடன் தீர்வு காண வலியுறுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்பின் நீட்சியாக அன்றாடம் அரசு துறைகளை அணுகும் பொதுமக்களுக்கு அரசு அலுவலர்கள் வழங்கும் சேவைகளை மேலும் செம்மைபடுத்தி அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும், சென்று சேரும் வண்ணம் மற்றுமொரு மைல்கல்லாக மக்களுடன் முதல்வர் என்ற புதிய திட்டம் முதல்வரின் முகவரி துறையால் நடைமுறைப்படுத்தப் படுகிறது.

மக்களுடன் முதல்வர் என்ற திட்டம் இரண்டாம் கட்டமாக கிராம ஊரக பகுதிகளில் பொதுமக்கள் அதிகமாக அணுகும் 15 அரசு துறைகள் சார்ந்த கோரிக்கைகள் அடையாளம் காணப்பட்டு அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, தென்காசி மாவட்டத்தின் ஊரக பகுதிகளில் சம்பந்தப்பட்ட துறைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து ஒரே குடையின் கீழ் கோரிக்கைகளை பெற தென்காசி மாவட்ட 10 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 221 கிராம பஞ்சாயத்துக்களை ஒருங்கிணைத்து 51 சிறப்பு முகாம்கள் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இன்றைய தினம், சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியங்களான களப்பாகுளம், இராமநாதபுரம், வடக்குப்புதூர், வீரிருப்பு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கான மக்களுடன் முதல்வர் முகாமில் 246 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. மேலும், 19.07.2024 அன்று ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம் வாடியூர், குறிச்சாம்பட்டி, ஆர் நவநீத கிருஷ்ணாபுரம், மேலக்கலங்கல் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு பரங்குன்றாபுரம் சமுதாய நலக்கூடத்திலும், கடையம் ஊராட்சி ஒன்றியம் கடையம், முதலியார்பட்டி, சேர்வைக்காரன்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு கடையம் பீம்சிங் திருமண மண்டபத்திலும், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம் ஆணைக்குளம், குலையநேரி, பொய்கை, வேலாயுதபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு மக்களுடன் முதல்வர் முகாம் குலையநேரி சமுதாய நலக்கூடத்திலும், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம் மேலப்பாவூர், கீழ வெள்ளக்கால், இராஜபாண்டி, இனாம், வெள்ளக்கால் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு மேலப்பாவூர் சமுதாய நலக்கூடத்திலும் மக்களுடன் முதல்வர் முகாம் நடைபெறவுள்ளது. எனவே, பொதுமக்கள் அனைவரும் இம்முகாமினை பயன்படுத்தி பயன்பெற வேண்டுமென மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்துள்ளார்.

# செஞ்சி அரசு மருத்துவமனையில் கட்டப்பட்டு வரும் தாய், சேய் நலக் கட்டடக் கட்டுமானப் பணி



விழுப்புரம், ஜூலை 14

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அரசு மருத்துவமனையில், கட்டப்பட்டு வரும் தாய், சேய் நலக் கட்டடக் கட்டுமானப் பணியினை மாவட்ட கலெக்டர் சி.பழனி நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

மாவட்ட கலெக்டர் தெரிவிக்கையில், விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அரசு மருத்துவமனையில், ரூ.5.00 கோடி மதிப்பீட்டில்,தாய், சேய் நலக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

இக்கட்டமானது 1279 ச.மீ பரப்பளவில் தரைத்தளம் மற்றும் முதல்தளம் என இரண்டு தளங்களாக கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தரைதளத்தில், முகப்பு அறை, பதிவு மற்றும் கணினி அறை, வரவேற்பு அறை, பணிநேர மருத்துவர் அறை, பிறந்த குழந்தைகள் புத்துயிர் பெறும் அறை, பிரசவ அறுவை அரங்கம், மின்தூக்கி அறை, பிரசவ முன் வார்டு, இருபாலர்களுக்கான தனித்தனி வார்டு கழிப்பறை வசதிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. முதல்தளத்தில், அறுவை சிகிச்சை பிரிவு, மாற்றும் அறை, செவிலியர் மாற்றும் அறை, மருத்துவர் மாற்றும் அறை, மீட்பு அறை, அறுவை அரங்கம், நோயாளிகள் தயார்படுத்தும் அறை, அறுவை சிகிச்சை மருத்துவர் அறை, பிரசவத்திற்கு முந்தைய அறை, இருபாலர்களுக்கான தனித்தனி வார்டு கழிப்பறை வசதிகள் மேற்கொள்ளப் படவுள்ளது.

மேலும், கட்டுமானப்பணிகளை தரமான முறையில் மேற்கொள்ள வேண்டும். வழங்கப்பட்ட காலத்திற்குள் பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்க வேண்டும் என சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என மாவட்ட கலெக்டர் சி.பழனி தெரிவித்தார்.

# பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்: கட்சியின் கொடியேற்றி பெயர் பலகை திறப்பு



அலங்காநல்லூர், ஜூலை.14

மதுரை மாவட்டம் பாலமேடு அருகே முடுவார்பட்டி ஊராட்சியில் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இதற்கு அலங்காநல்லூர் ஒன்றிய செயலாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார்.

மாநகர் மாவட்ட செயலாளர் சண்முகநாதன், தெற்கு மாவட்ட செயலாளர் ராஜா, ஒன்றிய பொருளாளர் ரேவதி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய தலைவர் விஜயகுமார் வரவேற்று பேசினார். மாநில பொருளாளர் கவிஞர் திலகபாமா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கட்சியின் கொடி ஏற்றி பெயர்பலகை திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். தொடர்ந்து ஒன்றிய அளவிலான நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் மேற்கு ஒன்றிய செயலாளர் குரு பாலமுருகன், கிழக்கு மாவட்ட இளைஞரணி செயலாளர் பிரவீன் குமார், மேற்கு ஒன்றிய இளைஞரணி செயலாளர் குணசேகரன், கிளைச் செயலாளர் நாராயணன், கிளை தலைவர் முருகன், பொருளாளர் ராஜ்குமார், செல்லம்பட்டி ஒன்றிய செயலாளர் ஈஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் பாலக்கரை பகுதியில் விழிப்புணர்வு அலங்கார ஊர்தி மற்றும்



பெரம்பலூர், ஜூலை 13

உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு பெரம்பலூர் பாலக்கரை பகுதியில், விழிப்புணர்வு அலங்கார ஊர்தி மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு பேரணியை மாவட்ட கலெக்டர் க.கற்பகம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ச.ஷ்யாம்ளாதேவி முன்னிலையில் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

ஜூலை 11, 1987 அன்று உலக மக்கள் தொகை 500 கோடி எட்டிய தினத்தை மக்கள் தொகை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த ஐ.நா. சபை ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 11 அன்று உலக மக்கள் தொகை தினமாக அனுசரிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில், பெரம்பலூர்மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் தொகை விழிப்புணர்வு பேரணி, பாலக்கரையில் தொடங்கி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் முடிவுற்றது. இப்பேரணியில் பெரம்பலூர்மாவட்டத்தில் உள்ள செவிலியர் கல்லூரிகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட மாணவிகள் பங்கேற்றனர்.

ஒவ்வொரு தம்பதியின் பெருமை குடும்ப நலம், அதுவே வளர்ந்த இந்தியாவின் புதிய அடையாளம்என்பது இந்த ஆண்டின் மக்கள் தொகை தினத்தின் முழக்கமாகவும், தாய்,சேய் நல்வாழ்வுக்கு சரியான வயதில் திருமணமும், போதிய பிறப்பு இடைவெளியும் சிறந்தது என்பது இந்த ஆண்டின் உலக மக்கள் தொகை தினத்தின் கருப்பொருளாகவும் உள்ளது.

ஒவ்வொரு பெண்ணின் திருமண வயது 21க்கு மேல் இருப்பதையும், இரு குழந்தைகளுக்கு இடையே உள்ள பிறப்பு இடைவெளி மூன்று ஆண்டுகள் என்பதையும் உறுதி செய்திட வேண்டும் என பொதுமக்களுக்கு வலியுறுத்தப்பட்டது.

தாய் சேய் நலனை கருத்தில் கொண்டு பதின்ம வயது கர்ப்பங்கள் மற்றும் திருமணம் ஆகாத கர்ப்பங்களும் தவிர்க்கப்பட வேண்டும் என்பது குறித்த விழிப்புணர்வு பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

உயர்வரிசை பிறப்பு என்பது மூன்று மற்றும் அதற்கு மேற்பட்ட குழந்தைகள் பெற்ற தாய்மார்களை குறிக்கும். மொத்த மகப்பேறு மரணங்களில் 30% உயர்வரிசை பிறப்புகளினால் நடைபெறுகிறது. மருத்துவ அலுவலர்கள் மற்றும் கிராம சுகாதார செவிலியர்கள் மூலம் உயர்வரிசை பிறப்பால் ஏற்படும் விளைவுகள் குறித்து மக்களுக்கு விளக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தேவையற்ற தொடர் கருக்கலைப்பு செய்வதால் இரத்தசோகை மற்றும் கருப்பை தொடர்பான நலக்குறைவு ஏற்பட்டு தாயின் உடல்நலம் பாதிக்கப்படும் என்பது குறித்து இப்பேரணியில் பொதுமக்களிடையே விளக்கப்ட்டது.

முன்னதாக உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு, மாவட்ட கலெக்டர் தலைமையில் விழிப்புணர்வு உறுதிமொழி எடுக்கும் நிகழ்வு நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து, உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடத்தப்பட்ட ஓவியப்போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவிகளுக்கு மாவட்ட கலெக்டர் பாராட்டுச் சான்றிதழ்களையும், பரிசுகளையும் வழங்கினார்.

இந்நிகழ்வில், இணை இயக்குநர் (நலப்பணிகள்) மாரிமுத்து, குடும்ப நல துணை இயக்குநர் (பொ) ராஜா, மாவட்ட சுகாதார அலுவலர் பிரதாப் குமார், துணை இயக்குநர் (காசநோய்) நெடுஞ்செழியன், துணை இயக்குநர் (தொழுநோய்) சுதா, பெரம்பலூர் வட்டாட்சியர் சரவணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# இலிங்கத்தடிமேடு பள்ளியில் புதிய குழந்தைகள் வரவேற்றல் மற்றும் தேவையான பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி



அரியலூர், ஜூலை 14

அரியலூர் அருகேயுள்ள இலிங்கத்தடிமேடு , திருவள்ளுவர் குழந்தைகள் இல்லத்தில் 2024 2025 ஆம் கல்வியாண்டில் புதிதாக சேர்ந்த குழந்தைகளை வரவேற்று, அவர்களுக்கு தேவையான போர்வை, பாய் , தலையனை, எழுது பொருட்கள் உள்ளிட்ட பொருட்கள் வழங்கும் நிகழ்ச்ச்சி நடைபெற்றது. வள்ளலார் கல்வி நிலைய செயலாளர் கொ. வி. புகழேந்தி நிகழ்ச்சி வருகை தந்த அனைவரையும் வரவேற்றார்.

அரியலூர் நிறுவனம் சார்ந்த பாதுகாப்பு அலுவலர் செல்வராஜ் முன்னிலைவகித்தார்.இவ்விழாவிற்கு குழந்தைகள் நல குழு தலைவர் செந்தில் குமார் தலைமையேற்று பேசுகையில் ஆயிரம் ஆலயங்கள் கட்டுவதை விட ஒரு பாடசாலையை கட்டுவது மிக சிறந்தது.

இருளில் இருந்து வெளிச்சத்தை காட்டும் நிறுவனம் என்றார். தொடர்ந்து சிறப்பு விருந்தினராக பங்கேற்ற மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் தர்மசீலன் பேசுகையில் வாழ்க்கையை முன்னேற்றும் சிறந்த கருவி கல்வியாகும் என்றார்.அரசு உதவி பெறும் கே.ஆர்.வி நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் பெ. சௌந்தரராஜன் மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கி பேசுகையில் கல்வி ஒருவரின் அறிவையும் ஆற்றலையும் உயர்த்தி சமூகத்தில் நல்ல நிலையை பெற்று தரும். அத்தகைய கல்வியின் முக்கியத்துவத்தை மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என

பேசினர்,விழா முடிவில் திருவள்ளுவர் குழந்தைகள் இல்ல கண்காணிப்பாளர் மோகன்ராஜ் நன்றியுரை கூறினார்.

# புதுக்கோட்டை குமாரராஜா மழலையர் தொடக்க பள்ளியில் காமராஜர் பிறந்த தினம் ஓவியப்போட்டி



புதுக்கோட்டை, ஜூலை 14

புதுக்கோட்டை பூங்காநகர் குமாரராஜா மழலையர் தொடக்கப்பள்ளியில் காமராஜர் பிறந்த தினம் ஓவியப்போட்டி. நடைபெற்றது பள்ளியின் தலைமை ஆசிரியை எஸ் அன்னபூரணி தலைமை வகித்தார் ..சிறுவர்கள் மாணவ , மாணவிகள். காமராஜரின் வாழ்க்கை பற்றி விழிப்புணர்வு ஓவியங்களை வரைந்து அசத்தினர் சிறப்பாக ஓவியங்களை வரைந்த மாணவிகளின் ஓவியங்கள் தேர்வு செய்து தலைமை ஆசிரியர் ஆசிரியைகள் பாராட்டினார் நிகழ்வில் ஆசிரியைகள் கிரிஜாம்பாள் அஞ்சலிதேவி ,காளியம்மாள் ,கலையரசி,கீதா மற்றும் மாணவ , மாணவிகள். பெற்றோர்கள் கலந்து கொண்டனர் விழா ஏற்பாடுகளை பள்ளி ஆசிரியைகள் சிறப்புடன் செய்தனர். முன்னதாக ஆசிரியை பார்கவி வரவேற்றார். நிறைவாக பள்ளியின் ஆசிரியை மேனகா நன்றி கூறினார்.

# விஷச்சாராய விவாகரத்தில் மேலும் 2 பேர் கைது: நடவடிக்கை உயர்வு



கள்ளக்குறிச்சி, ஜூலை 14

கள்ளக்குறிச்சி கருணாபுரம் விஷ சாராயம் விவாகரத்தில் கைது செய்யப்பட்ட கன்னுக்குட்டி என்கின்ற கோவிந்தராஜ் கொடுத்த தகவலின் பெயரில் கள்ளக்குறிச்சி கருணாபுரத்தை சேர்ந்த முருகேசன் பரமசிவம் ஆகியோர் இருவரையும் சிபிசிஐடி போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீண்டும் இருவரையும் காவல் விசாரணைக்கு எடுத்து நான்கு மணி நேரம் விசாரணைக்கு பின்னர் சிபிசிஐடி போலீசார் கள்ளக்குறிச்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர் தினர் அவர்கள் இருவரையும் வரும் ஜூலை 27ஆம் தேதி வரை நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்க நீதிபதி ஸ்ரீராம் உத்தரவிட்டுள்ளார்.

# கோபிசெட்டிபாளையம் வட்டம், கொடிவேரி அணைக்கட்டிலிருந்து தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை வாய்க்கால் பாசன பகுதிகளுக்கு பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு



ஈரோடு, ஜூலை 14

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கொடிவேரி அணைக்கட்டிலிருந்து தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை வாய்க்கால் பாசன பகுதிகளுக்கு மாநிலங்களவை உறுப்பினர் அந்தியுர்.ப.செல்வராஜ் அவர்கள் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் 2024-2025 ஆம் ஆண்டு முதல்போக பாசனத்திற்கு ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்காலிலுள்ள பாசன நிலங்களுக்கு 12.07.2024 முதல் 08.11.2024 வரை 120 நாட்களுக்கு 8,812.80 மில்லியன் கனஅடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து கோபிசெட்டிபாளையம் வட்டம், கொடிவேரி அணைக்கட்டிலிருந்து தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை வாய்க்கால் பாசன பகுதிகளுக்கு மாநிலங்களவை உறுப்பினர் அந்தியுர்.ப.செல்வராஜ் தண்ணீர்திறந்துவைத்தார். இதனால் ஈரோடு மாவட்டத்தில் உள்ள கோபிசெட்டிபாளையம், அந்தியுர் மற்றும் பவானி வட்டத்திலுள்ள 24,504 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்காலிலுள்ள 24,504 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 12.07.2024 முதல் 08.11.2024 வரை 120 நாட்களுக்கு 8812.80 மில்லியன் கனஅடிக்கு மிகாமல், அணையின் தற்போதைய நீர் இருப்பு மற்றும் நீர்வரத்தினைப் பொறுத்து, தேவைக்கேற்ப, தண்ணீர் திறந்து விடப்படும். எனவே, விவசாய பெருமக்கள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி விவசாயப் பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் நவமணி கந்தசாமி, கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் கண்ணப்பன், உதவி செயற்பொறியாளர் கல்பனா, வருவாய் வட்டாட்சியர் கார்த்திக் உட்பட கோபிசெட்டிபாளையம், வாணிப்புத்தூர் உதவி பொறியாளர்கள், பாசன விவசாய சங்க தலைவர்கள், விவசாய பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு கூட்டம்



மயிலாடுதுறை, ஜூலை 14

மயிலாடுதுறை மாவட்டம், மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு கூட்டம் மாவட்ட கலெக்டர் ஏ.பி.மகாபாரதி தலைமையில், நடைபெற்றது.

அரசுப் பள்ளிகளில் பள்ளிகளின் உட்கட்டமைப்பு மற்றும் கல்வியின் தரத்தினை மேம்படுத்திட தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக மாவட்ட கலெக்டர் தலைமையில் மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு ஒன்றை உருவாக்க ஆணையிட்டிருந்தது. அவ்வாணையின்படி மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் தலைமையில் பல்வேறு துறைகளைச் சார்ந்த 24 பேர் கொண்ட மாவட்ட அளவிலான கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டு அதன் அறிமுகக் கூட்டம் 30.05.2024 அன்று நடத்தப்பட்டது. அக்குழுவின் இரண்டாவது கூட்டம் 11.07.2024 அன்று மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி தலைமையில் நடைபெற்றது.

இதில் பல்வேறு துறைகளைச் சார்ந்த உயர் அலுவலர்கள் மற்றும் மாவட்ட கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக்குழுவின் மாநில கருத்தாளர்கள் ஜெயஸ்ரீ, ரத்ன விஜயன், யாமினி, கோபிநாத் மற்றும் நவீன் ஆகியோர் கலந்து கொண்டு குழுவின் கடமைகள், பொறுப்புகள் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு மூலம் இயற்றப்படும் தீர்மானங்களை எவ்வாறு கண்காணிப்பது மற்றும் நிறைவேற்றுவது குறித்தும் கருத்துக்களை வழங்கினர்.

இந்நிகழ்வில், மயிலாடுதுறை மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கநிலை) (பொறுப்பு) சாந்தி, முதன்மைக்கல்வி அலுவலக நேர்முக உதவியாளர் (உயர்நிலை) தி. முத்துக்கணியன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கயல்விழி, ப.பிரகா;;, ப.சண்முகவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காரப்பேட்டையிலுள்ள தமிழ்நாடு அரசு மருத்துவ கிடங்கு: மாவட்ட கலெக்டர் பார்வையிட்டு ஆய்வு

காஞ்சிபுரம் ஜூலை 14

காஞ்சிபுரம் மாவட்டம், காரபேட்டையிலுள்ள தமிழ்நாடு அரசு மருத்துவ கிடங்கினை மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி மோகன் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். குளிர்சாதன பெட்டியில் வைக்கப்பட்டுள்ள பாம்புகடி, நாய்கடி மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளை பார்வையிட்டு, அதன் இருப்புகளை பற்றி கேட்டறிந்தார். மேலும் அத்தியாவசிய மருந்துகள், கேன்சர் மருந்துகள் இருப்பு பற்றிய பதிவேடுகளை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள். பின்பு வாலாஜாபாத் ஒன்றியம், காரை ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் புதிய குளம் வெட்டும் பணியினை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு, ஊராட்சியிலுள்ள பாலிடெக்னிக் கல்லூரி பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கான விடுதியில் ஆய்வு மேற்கொண்டார். இவ் ஆய்வின்போது அண்ணா புற்றுநோய் மருத்துவமனை இயக்குநர் மரு.சரவணன், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) செந்தில் குமார், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) செந்தில், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சண்முகசுந்தரம் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
14.7.2024

# மீண்டும் மூக்குத்தி அம்மனாக நயன்தாரா வீடியோ வெளியிட்டு படக்குழு அறிவிப்பு




2020 ஆம் ஆண்டு ஆர்.ஜே பாலாஜி இயக்கத்தில் நயன்தாரா நடிப்பில் வெளிவந்த மூக்குத்தி அம்மன் படம் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இப்படத்தின் மூலம் இயக்குநராகத் தமிழ் சினிமாவில் ஆர்.ஜே பாலாஜி அறிமுகமானார்.

அண்மையில் மூக்குத்தி அம்மன் திரைப்படத்தின் இரண்டாம் பாகத்தை ஆர்.ஜே பாலாஜி. இயக்கவுள்ளார் என்றும் இப்படத்தில் நயன்தாராவுக்கு பதிலாக திரிஷா நடிக்கவுள்ளதாகவும் மூக்குத்தி அம்மன் 2 படத்திற்கு மாசாணி அம்மன் என பெயர் வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியது. .

இந்நிலையில், 'மூக்குத்தி அம்மன்' திரைப்படத்தின் 2ம் பாகம் உருவாகவுள்ளதாக பட தயாரிப்பு நிறுவனம் அதிகாரப்பூர்வ அறிவித்துள்ளது. இப்படத்திலும் அம்மன் கதாபாத்திரத்தில் நயன்தாரா நடிக்கிறார் என்று படக்குழு வீடியோ வெளியிட்டு தெரிவித்துள்ளது.

ஆனால் இப்படத்தின் இயக்குநர் யார் என்று படக்குழு இன்னமும் அறிவிக்கவில்லை. இப்படத்தை ஆர்.ஜே பாலாஜிக்கு பதிலாக வேறொரு இயக்குநர் இயக்குவார் என்று சொல்லப்படுகிறது.

அதே சமயம் திரிஷாவை வைத்து மாசாணியம்மன் என்ற படத்தை ஆர்.ஜே பாலாஜி இயக்குவார் என்றும் சொல்லப்படுகிறது.

# கேப்டன் அமெரிக்கா: பிரேவ் நியூ வேர்ல்ட் திரைப்படத்தின் டீசர் வெளியானது



2011 ஆம் ஆண்டு வெளியான கேப்டன் அமெரிக்கா திரைப்படம் மிகப்பெரிய வெற்றியை பெற்றது. அதனையடுத்து, அப்படத்தின் அடுத்தடுத்த பாகங்கள் வெளிவந்து வெற்றி பெற்றது.

கேப்டன் அமெரிக்கா கதாபாத்திரத்தில் பல ஆண்டுகளாக நடித்து வந்த க்றிஸ் எவான்சின் ஒப்பந்தம் 2019 ஆண்டு முடிவடைந்தது. இதனையடுத்து, 2019 ஆம் ஆண்டு வெளியான அவெஞ்சர்ஸ் எண்டுகேம் படத்தில்கேப்டன்அமெரிக்காகதாபாத்திரம்தன்னுடையபொறுப்பை தன் நண்பர் ஃபால்கன்/ஆண்டனி மெக்கீயிடம் ஒப்படைப்பதை போல முடித்திருந்தனர்.

அதன் பின்னர் பால்கன் அண்ட் வின்டர் சோல்ஜர்' வெப் தொடரில் கேப்டன் அமெரிக்காவாக ஆண்டனி மெக்கீ நடித்திருந்தார்.

தற்போது ஆண்டனி மெக்கீ நடிப்பில் கேப்டன் அமெரிக்கா: ப்ரேவ் நியூ வேர்ல்ட்' என்ற படம் உருவாகியுள்ளது. நேற்று வெளியான இப்படத்தின் டீசர் ரசிகர்களிடம் வரவேற்பை பெற்றுள்ளது. .

இந்த டீசரில் இறுதியில் வரும் ரெட் ஹல்க் கதாபாத்திரம் ரசிகர்களின் எதிர்பார்ப்பை எகிற வைத்துள்ளது. காமிக்ஸை பொறுத்தவரை ஹல்க்கை அழிப்பதற்காக தண்டர்போல்ட் ராஸ் ரெட் ஹல்க் ஆக மாறுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நீடா அம்பானியுடன் இணைந்து நடனமாடிய ஷாருக்கான், சல்மான்கான் வீடியோ வைரல்




முகேஷ் அம்பானியின் இளைய மகன் ஆன்ந்த அம்பானியின் ஆடம்பர திருமணம் நேற்று மும்பையில் நடைபெற்றது. கடந்த 1½ ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. திருமணத்துக்கு முந்தைய வைபவங்களும், கொண்டாட்டங்களும் கடந்த சில மாதங்களாகவே நடந்து வந்தது.

நேற்று மும்பை பி.கே.சி.யில் உள்ள அம்பானி குடும்பத்துக்கு சொந்தமான ஜியோ வேர்ல்டு டிரைவ் கன்வென்சன் அரங்கில் ஆனந்த் அம்பானி ராதிகா மெர்ச்சன்ட் திருமணம் நடந்தது.

திருமண விழாவில் நடிகர் ரஜினிகாந்த், கிரிக்கெட் வீரர் டோனி, ஹாலிவுட் நடிகர் ஜான் சீனா உள்ளிட்ட பல்வேறு பிரபலங்கள் கலந்து கொண்டனர்.

திருமணநிகழ்வில்நீட்டாஅம்பானியுடன்இணைந்து ஷாருக்கான் மற்றும் சல்மான் கான் நடனமாடியுள்ளனர். இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

# ஆனந்த் அம்பானி திருமணத்தில் கலந்து கொள்ளாத அக்ஷய் குமார் ஏன் தெரியுமா?



சுதா கொங்கரா இயக்கத்தில் சூர்யா நடிப்பில் கடந்த 2020ம் ஆண்டு வெளியான 'சூரரைப் போற்று' திரைப்படம் மக்களிடையே வரவேற்பை பெற்றது. இந்தப் படம் தற்போது இந்தியில் 'சர்ஃபிரா' என்ற பெயரில் ரீமேக் ஆகியுள்ளது.

அக்ஷய் குமார் நாயகனாக நடிக்கும் இப்படத்தை தமிழில் இயக்கிய சுதா கொங்கராவே இயக்கியுள்ளார். இத் திரைப்படம் நேற்று திரையரங்குகளில் வெளியானது.

இப்படத்தின் புரோமோஷன் வேலைகளில் ஈடுபட்டு வந்த அக்ஷய் குமாருக்கு திடீரென உடல்நல குறைவு செற்பட்டது. இதனையடுத்து அவருக்கு மருத்துவ பரிசோதனை செய்ததில் கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. இதனையடுத்து அவர் தன்னை தனிமைப்படுத்திக்கொண்டார். படம் வெளியான அன்று அவரால் ரசிகர்களை சந்திக்க முடியவில்லை.

மேலும், முகேஷ் அம்பானியின் மகன் ஆனந்த் அம்பானி ராதிகா மெர்சண்ட் திருமணம் நேற்று மும்பையில் கோலாகலமாக நடைபெற்றது. ஆனந்த் அம்பானி அக்ஷய் குமாரை நேரில் சந்தித்து திருமண அழைப்பு விடுத்தார். ஆனால், தற்போது கரோனா பாதிப்பு காரணமாக அக்ஷய் குமாரால் திருமணத்தில் கலந்துகொள்ள முடியவில்லை.

# 'இந்தியன் 2' முதல் நாள் வசூல் எவ்வளவு ?

நடிகர் கமல்ஹாசன், இயக்குநர் சங்கர் கூட்டணியில் உருவாகி இருக்கும் படம் இந்தியன் 2. சுமார் 28 வருடங்களுக்கு பிறகு சங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியன் முதல் பாகம் இன்னும் பலரால் ரசிக்கப்பட்டு வரும் நிலையில் இந்தியன் 2 பெரும் எதிர்பார்பை ஏற்படுத்தியது.

அனிருத் இசையமைத்துள்ள இந்த படத்தின் பாடல்கள் சில நாட்களுக்கு முன் வெளியாகி இணையத்தில் வைரலாகியது. இந்த படத்தில் பாபி சிம்ஹா, சித்தார்த், சமுத்திரக்கனி, பிரியா பவானி சங்கர், காஜல் அகர்வால், ரகுல் பிரீத் சிங் மற்றும் பலர் நடித்துள்ளனர். லைகா நிறுவனம் இப்படத்தை தயாரித்து உள்ளது.

இப்படத்திற்கு தடை கோரிய மனுவை தள்ளுபடி செய்த உயர்நீதிமன்ற மதுரை கிளை இந்தியன் 2 படத்தை வெளியிட தடையில்லை என்று உத்தரவு பிறப்பித்தது.

இதையடுத்து, தமிழகம் முழுவதும் நேற்று காலை 9 மணியளவில் இந்தியன் 2 படம் வெளியானது. உலகம் முழுவதும் பல்வேறு திரையரங்குகளில் நேற்று இந்தியன் 2 வெளியானது. படம் வெளியான திரையங்குகள் முன்பு கூடிய ரசிகர்கள் ஆட்டம், பாட்டம் என கொண்டாடினர். இருப்பினும், ரசிகர்கள் மத்தியில் ஒரு கவலையான விமர்சனங்களையே பெற்று வருகிறது. இந்நிலையில், இப்படத்தின் முதல் நாள் வசூல் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம், இந்தியா முழுவதும் ரூ.26 கோடி வசூலித்துள்ளது. தமிழில் ரூ.17 கோடியும், தெலுங்கில் ரூ.7.9 கோடியும், இந்தியில் 1.1 கோடியும் வசூலித்துள்ளது.

முன்னதாக, கமல் நடிப்பில் வெளியான 'விக்ரம்' ரூ.32 கோடியும், சமீபத்தில் வெளியான 'கல்கி 2898 ஏடி' ரூ. 95 கோடியும் முதல் நாளில் வசூலித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# உன்னை நினைத்து 2ம் பாகம் எடுக்க போறேன்.. அதில் ஹீரோ இவர் தான்..! இயக்குனர் விக்ரமன்

குடும்பங்கள் கொண்டாடும் சூப்பர் ஹிட் திரைப்படங்களை இயக்கியவர் இயக்குனர் விக்ரமன். 'புதிய பாதை' படத்தில், இயக்குனரும், நடிகருமான பார்த்திபனிடம் துணை இயக்குனராக பணியாற்றியதை தொடர்ந்து, 1990ம் ஆண்டு வெளியான 'புது வசந்தம்' படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானார்.

இந்த படத்தை தொடர்ந்து, பெரும்புள்ளி கோகுலம், நான் பேச நினைப்பதெல்லாம், பூவே உனக்காக சூர்ய வம்சம், உன்னை நினைத்து, வனத்தைப்போல உள்ளிட்ட பல வெற்றிப்படங்களை இயக்கினார்.

இதில் பூவே உனக்காக திரைப்படம் தளபதி விஜய்க்கு மிகப்பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியது.

மேலும் சூர்யாவை வைத்து இவர் இயக்கிய உன்னை நினைத்து இயக்கினார். இந்த படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இயக்குனர் விக்ரமன் கடைசியாக 2014ம் ஆண்டில் நினைத்தது யாரோ என்கிற படத்தை இயக்கினார். அதன்பிறகு, அவரது மனைவிக்கு உடல்நலம் சரியில்லாத காரணத்தால், திரைப்படங்கள் இயக்கவில்லை.

இந்நிலையில், இயக்குனர் விக்ரமன் உன்னை நினைத்து படத்தின் இரண்டாம் பாகம் எடுக்க உள்ளதாக நேர்காணல் ஒன்றில் தெரிவித்துள்ளார். இந்த படத்திற்கான ஸ்கிரிப்ட் தயாராக இருப்பதாகவும், சந்தானம் இந்த படத்தில் ஹீரோவாக நடிப்பார் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஆண்டர்சனுக்கு வாழ்த்து தெரிவித்த பதிவை டெலிட் செய்த பாபர் அசாம் கலாய்த்த நெட்டிசன்கள்



இங்கிலாந்து வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையேயான முதல் போட்டியில் இங்கிலாந்து அணி இன்னிங்ஸ் மட்டும் 114 ரன்கள்வித்தியாசத்தில்வெற்றி பெற்றது. தனது கடைசி டெஸ்ட் போட்டியில் விளையாடி ஆண்டர்சன் இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்த போட்டியுடன் இங்கிலாந்து அணியின் ஜாம்பவான் ஜேம்ஸ் ஆண்டர்சன் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறார். 22 ஆண்டுகளாக இங்கிலாந்து அணிக்காக விளையாடிய அவர் மொத்தமாக 991 விக்கெட்டும், டெஸ்ட் போட்டியில் மட்டும் 188 போட்டிகள் விளையாடி 704 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். 32 முறை 5 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள் பட்டியலில் ஆண்டர்சன் 3வது இடத்தில் உள்ளார். முதல் மற்றும் 2வது இடங்கள் முறையே முரளிதரன் (800 விக்கெட்டுகள்), வார்னே (708) உள்ளனர்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற ஆண்டர்சனுக்கு உலகம் முழுவதும் இருந்து முன்னாள் வீரர்கள் இந்நாள் வீரர்கள் என பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

அவ்வகையில் பாகிஸ்தானின் அணியின் கேப்டனான பாபர் அசாமும் தனது எக்ஸ் பக்கத்தில் ஆண்டர்சனுக்கு வாழ்த்து தெரிவித்திருந்தார். அந்த வாழ்த்து பதிவில், "உங்களது கட்டர்களை எதிர்கொள்வதே பெரும் பாக்கியம் தான். ஒரு அழகான விளையாட்டு ஒரு சிறந்த வீரரை இழக்கிறது. இவ்விளையாட்டிற்காக நீங்கள் செய்த தியாகம் அசாத்தியமானது.. உங்களின் மீது மிகுந்த மரியாதை உள்ளது. கோட்" என்று பதிவிட்டிருந்தார்.

இந்த பதிவினை அடுத்து, தனது கிரிக்கெட் வாழ்க்கையில் பாபர் அசாமுக்கு 2 முறை மட்டும் தான் ஆண்டர்சன் கட்டர்கள் வீசியுள்ளார் என்று சமூக வலைத்தளத்தில் பதிவிட்டு பாபர் அசாமை நெட்டிசன்கள் கிண்டலடிக்க ஆரம்பித்தனர். நெட்டிசன்களின் விமர்சனத்தை தொடர்ந்து உடனடியாக அந்த பதிவை பாபர் அசாம் டெலிட் செய்துள்ளார். பின்னர் புதிய பதிவை பாபர் அசாம் இட்டுள்ளார். அதில், பழைய பதிவில் இருந்து கட்டர் என்ற வார்த்தையை நீக்கி விட்டு ஸ்விங் என்ற வார்த்தையை மட்டும் சேர்த்து பாபர் அசாம் பதிவிட்டுள்ளார்.

# விம்பிள்டன் டென்னிஸ்: சாம்பியன் பட்டம் பெறும் வீராங்கனைக்கு பரிசுத்தொகை தெரியுமா?



விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் செக் வீராங்கனை பார்பரா கிரெஜ்சிகோவா, இத்தாலி வீராங்கனை ஜாஸ்மின் பவுலினி உடன் மோதுகிறார்.

இந்நிலையில், விம்பிள்டன்தொடரில்ஒற்றையர்பிரிவில்பட்டம் வெல்லும் சாம்பியன்களுக்கு தலா ரூ.28 கோடியும், 2வது இடத்தை பிடிப்போருக்கு தலா ரூ.13 கோடியும் பரிசுத்தொகையாக கிடைக்கும்.

போட்டிக்கான மொத்த பரிசுத்தொகை ரூ.534 கோடியாகும். இது கடந்த ஆண்டை விட 11.9 சதவீதம் அதிகமாகும். முதல் சுற்றில் வெளியேறும் போட்டியாளர்கள் 63 லட்சம் பெறுவார்கள் என தெரிவித்துள்ளது.

# இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் மகளுக்கு பந்துவீசிய ஆண்டர்சன் வீடியோ



இங்கிலாந்து வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையேயான முதல் போட்டியில் இங்கிலாந்து அணி இன்னிங்ஸ் மட்டும் 114 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தனது கடைசி டெஸ்ட் போட்டியில் விளையாடி ஆண்டர்சன் இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்த போட்டியுடன் இங்கிலாந்து அணியின் ஜாம்பவான் ஜேம்ஸ் ஆண்டர்சன் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறார். 22 ஆண்டுகளாக இங்கிலாந்து அணிக்காக விளையாடிய அவர் மொத்தமாக 991 விக்கெட்டும், டெஸ்ட் போட்டியில் மட்டும் 188 போட்டிகள் விளையாடி 704 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். 32 முறை 5 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள் பட்டியலில் ஆண்டர்சன் 3வது இடத்தில் உள்ளார்.

முதல் மற்றும் 2வது இடங்கள் முறையே முரளிதரன் (800 விக்கெட்டுகள்), வார்னே (708) உள்ளனர்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற ஆண்டர்சனுக்கு உலகம் முழுவதும் இருந்து முன்னாள் வீரர்கள் இந்நாள் வீரர்கள் என பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றவுடன் தனது சக அணி வீரர்களுடன் ஆண்டர்சன் நேரம் செலவிட்டார். அப்போது இங்கிலாந்து அணியின் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் மகளுக்கு ஆண்டர்சன் மிதமான வேகத்தில் பந்துவீசி விளையாடியுள்ளார்.

இது தொடர்பாக பேசிய பென் ஸ்டோக்ஸ் எனது மகள் பேட்டிங் செய்ய எனது மகன் பீல்டிங் செய்ய ஆண்டர்சன் பந்துவீசினார் என்று நெகிழ்ச்சியாக தெரிவித்தார்.

# ஜிம்பாப்வேக்கு எதிரான 20 ஓவர் போட்டி: தொடரை கைப்பற்றும் முனைப்பில் இந்திய அணி




ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 ஆட்டங்கள் கொண்ட 20 ஓவர் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலாவது ஆட்டத்தில் ஜிம்பாப்வே அணி 13 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அடுத்த 2 ஆட்டங்களில் இந்திய அணி முறையே 100 ரன், 23 ரன் வித்தியாசத்தில் வெற்றி கண்டு தொடரில் 21 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இந்த நிலையில் இந்தியா ஜிம்பாப்வே அணிகள் இடையிலான 4வது 20 ஓவர் கிரிக்கெட் போட்டி ஹராரே ஸ்போர்ட்ஸ் கிளப் மைதானத்தில் நடக்கிறது. இந்திய அணியில் பேட்டிங்கில் ஜெய்ஸ்வால், கேப்டன் சுப்மன் கில், ருதுராஜ் கெய்க்வாட், அபிஷேக் ஷர்மா, சஞ்சு சாம்சன், ரிங்கு சிங் என்று பெரிய பட்டாளமே வரிசை கட்டி நிற்கிறது. பந்து வீச்சில் ஆவேஷ் கான், கலீல் அகமது, ரவி பிஷ்னோய், வாஷிங்டன் சுந்தர் உள்ளிட்டோர் மிரட்டுகிறார்கள். எதிர்பாராதவிதமாக முதலாவது ஆட்டத்தில் சிறிய இலக்கை எட்ட முடியாமல் தோல்வியை தழுவிய இந்திய அணி அடுத்த 2 ஆட்டங்களில் அதிக ரன் குவித்து வெற்றிக்கனியை பறித்தது. அதே போல் இன்றைய ஆட்டத்திலும் ஆதிக்கம் செலுத்தி தொடரை வசப்படுத்தும் உத்வேகத்துடன் இந்திய வீரர்கள் ஆயத்தமாக உள்ளனர். அதே சமயம் கடந்த 2 ஆட்டங்களில் தோல்வியை சந்தித்த ஜிம்பாப்வே அணி இன்றைய ஆட்டத்தில் தோற்றால் தொடரை இழக்க நேரிடும். எனவே அந்த அணி கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டிய நெருக்கடியில் இருக்கிறது. ஜிம்பாப்வே அணியில் கேப்டன் சிகந்தர் ராசா, வெஸ்லி மாதவெரே, பிரையன் பென்னெட், டியான் மயர்ஸ், கிளைவ் மடான்டே, முஜரபானி உள்ளிட்ட சிறந்த வீரர்கள் உள்ளனர். உள்ளூர் அனுகூலத்தை பயன்படுத்தி தொடரை இழக்காமல் இருக்க எல்லா வகையிலும் ஜிம்பாப்வே அணி போராடும். எனவே இந்த ஆட்டத்தில் விறுவிறுப்புக்கு குறைவு இருக்காது. இந்த போட்டிக்கான இரு அணிகளின் உத்தேச பட்டியல் வருமாறு: இந்தியா: யஷஸ்வி ஜெய்ஸ்வால், சுப்மன் கில் (கேப்டன்), அபிஷேக் ஷர்மா, ருதுராஜ் கெய்க்வாட், சஞ்சு சாம்சன், ரிங்கு சிங், ஷிவம் துபே, வாஷிங்டன் சுந்தர், ரவி பிஷ்னோய், ஆவேஷ் கான், கலீல் அகமது. ஜிம்பாப்வே: வெஸ்லி மாதவெரே, டாடிவான்சே மருமானி, பிரையன்பென்னெட், டியான்மயர்ஸ், சிகந்தர்ராசா (கேப்டன்), ஜோனதன் கேம்ப்பெல், கிளைவ் மடான்டே, வெலிங்டன் மசகட்சா, பிளஸ்சிங் முஜரபானி, ரிச்சர்ட் என்கராவா, சதரா. மாலை 4.30 மணிக்கு தொடங்கும் இந்த ஆட்டத்தை சோனி ஸ்போர்ட்ஸ் டென் 2, 3, 4 ஆகிய சேனல்கள் நேரடி ஒளிபரப்பு செய்கின்றன.



**மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்**
**அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு**
**விளக்கம்:**
பிறனுக்குகேட்டைத்தரும்தீயசெயல்களை ஒருவன் மறந்தும் கூட எண்ணக்கூடாது, எண்ணினால் எண்ணியவனுக்கு கேடு விளையுமாறு அறம் எண்ணும்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.